Sri Lankan Journal of Arabic and Islamic Studies
ISSN: 2550:3014
Published by: Faculty of Islamic Studies and Arabic Language,
South Eastern University of Sri Lanka

# Role of Islamic Institutions In Solving Family Problems among the Muslim Families Of Kattankudy : Case Study.

## முஸ்லிம்களிடையே இடம்பெறும் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் இஸ்லாமிய நிறுவனங்களின் வகிபங்கு - காத்தான்குடிப் பிரதேச நிலை பற்றிய ஓர் ஆய்வு

MIM. Jazeel[1] and MLM. Helfan [2]

[1&2] Department of Islamic Studies, South Eastern University Of Sri Lanka
(jazeelmi@seu.ac.lk, mlhelfan@gmail.com )

**ABSTRACT**

The domestic family problems becomes alarming social problems and main cause for the rise of divorce rate. These problems are to be addressed in effective ways through an organizational measures. The main objective of this research is to evaluate the role of Islamic institutions to overcome the family problems in kattankudy. In this research, the qualitative methodology was used and data for this research has been collected through interviews of notable persons and officers from 13 Islamic institutions that works for the community development in particular research area. The interview data was coded and analyzed. The records and documents of Islamic institution were also reviewed for this study. Few of those institutions are working towards solving the domestic family problems. The Islamic women organizations, Zakat Foundation, and Marriage Arbitrational Board address the family issues in an effective means to overcome the domestic problems than Quazi court and masjid. The nature of the domestic problems and their causes in study area most likely provided spaces for former institutions to play the extended role. Moreover, it is quit usual that the women organizations take serious concerns and involvement in the family problems, of that, the women are being worst affected. This study describes the model way and guidance for addressing the family problems in order to sort out them and it further helps to those who interested in conducting the similar research.

**Keywords**: Family Problems, Muslim Family in Kattankudy, Islamic Institutions.

**ஆய்வுச் சுருக்கம்**

உள்ளகப் குடும்பப் பிரச்சினைகள் குடும்பச் சிதைவுக்கும், விவாகரத்தின் அதிகரிப்புக்கும் வழிகோலியுள்ளன. இந்தவகையில், இப்பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான முனைவுகளும் அவற்றுக்கான நிறுவன ரீதியான அணுகுமுறையும் அவசியமாகின்றது. காத்தான்குடி முஸ்லிம் குடும்பங்களில் இடம்பெறும் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் இப்பிரதேசத்தில் செயற்படும் இஸ்லாமிய நிறுவனங்களின் வகிபாகத்தை மதிப்பிடுதல் இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். பண்பு ரீதியான ஆய்வு முறையிலான இக்கற்கை, ஆய்வுப் பிரதேசத்தில் குடும்பப் பிரச்சினைகளைக் கையாளுகின்ற 13 இஸ்லாமிய அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள், அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் ஆகியோரிடம் பெறப்பட்ட நேர்காணலின் பகுப்பாய்வினையும் மேலும் அவற்றின் ஆவணங்களின் மீளாய்வினையும் மையப்படுத்தியது. குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதையும் இந் நிறுவனங்கள் சில நோக்கங்களாகக் கொண்டு செயலாற்றி வருகின்றன. இஸ்லாமிய மகளிர் அமைப்புக்கள், கூட்டு ஸகாத் நிறுவனம், திருமண நல்லிணக்க சபை ஆகிய அமைப்புக்கள் இவ்விடயத்தில் கூடிய செயற்பாட்டு திறனையும் அடைவினையும் கொண்டுள்ளன. ஒப்பீட்டளவில் காழி நீதிமன்றம், மஸ்ஜிதுகளின் இத்துறைசார் பங்களிப்புக்கள் குறிப்பிடத்தக்கதாக இல்லை. இப்பிரதேச உள்ளகப் பிரச்சினைகளின் தன்மைகளும் காரணிகளும் முன்னர் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கான வாய்ப்பினை அளித்துள்ளது போல் உள்ளது. குடும்பப் பிரச்சினையில் பெண்களே அதிகம் பாதிப்படைவதால் மகளிர் அமைப்புக்கள் இவ்விடயத்தில் கூடிய கரிசனை கொண்டுள்ளமை இயல்பானதே. எனவே குடும்பப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முன்னெடுப்புக்கள், அதற்கான வழிகாட்டல்கள் பற்றிய மாதிரி செயற்பாட்டை தருவதாகவும், எதிர் காலத்தில் இவ்விடயத்தில் ஆய்வை மேற்கொள்வோருக்கு உதவுவதாகவும் இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச் சொற்கள்**: குடும்பப் பிரச்சினைகள், காத்தான்குடி முஸ்லிம் குடும்பம், இஸ்லாமிய நிறுவனங்கள்.

**ஆய்வுப் பின்னணி**

குடும்பங்களின் சேர்க்கையே சமூகம். அந்தவகையில் சமூகத்தின் நிலைபேற்றிக்கு குடும்பம் என்ற நிறுவனம் இன்றியமையாத ஒன்று எனலாம். பெரும்பாலும் குடும்பம் கணவன், மனைவி, குழந்தை ஆகிய அங்கத்தவர்களைக் கொண்டமைந்து பல்வேறு பொறுப்பு, கடமை, எதிர்பார்ப்பு போன்றவற்றை வேண்டி நிற்பதாக உள்ளது. உழைப்பும் சம்பாத்தியமும் என கணவனின் முயற்சியையும் குழந்தை வளர்ப்பு, வீட்டை நிர்வகித்தல் என மனைவியின் முகாமைத்துவத்தையும் வேண்டி நிற்கின்றது. குடும்பம் ஒன்றின் பிரதான அங்கத்தவர் என்ற வகையில் கணவன், மனைவி ஆண் பெண்ணாக அமைவதில் உடல், உள ரீதியான வேறுபாடுகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வேறுபாடுகள் இருசாராருக்குமிடையில் பிணைப்பையும் நெருக்கத்தையும் ஏற்படுத்தவல்ல உயிரியல் தன்மைகளைக் கொண்டது. இருந்த போதிலும் பிழையான புரிதல், எதிர்பார்ப்புக்களின் பரிமானம், ஒழுக்க பெறுமானங்கள் மீறல், கலாசார வேறுபாடுகள் போன்றன இருவரிடையேயும் பிரச்சினையைத் தோற்றுவிக்கின்றது.

இன்றைய சூழலில் குடும்பம் பற்றிய நோக்கு, அதன் அங்கத்தவர்களின் பொறுப்புக்கள், கடமைகள் பற்றிய புரிதல், எண்ணிலடங்காத எதிர்பார்ப்புக்கள், இரு சாராரின் தொழில் வாய்ப்பு போன்றன குடும்பப் பிரச்சினைகளுக்கான சந்தர்ப்பங்களை வெகுவாக அதிகரித்துள்ளன.

குடும்பப் பிரச்சினைகள் ஏற்படுவது தவிர்க்க முடியாத ஒன்று என்பதை இஸ்லாம் ஏற்றுக் கொண்டுள்ளது. எனவேதான் இஸ்லாத்தில் தகுந்த காரணங்களுக்காக விவாகரத்திற்கான அனுமதியை வழங்குகின்றது. ஆயினும் இதனை தீர்த்து வைப்பதற்கான கரிசனையும் ஏற்பாடும் மேற்கொள்வது பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறிப்பிடுகின்றது. "கணவன் மனைவி ஆகிய இருவரிடையே பிணக்குகள் உண்டாகி பிரிவினை ஏற்படும் என அஞ்சினால் கணவனின் உறவினரிடமிருந்து ஒருவரையும், மனைவியின் உறவினரிடமிருந்து ஒருவரையும் நடுவர்களாக ஏற்படுத்துங்கள். அந்த இருவரும் சமாதானத்தை விரும்பினால் அல்லாஹ் அந்த இருவரிடையே ஒற்றுமை ஏற்படும் படி செய்து விடுவான்" (அல்குர்ஆன் 04:35) இத்தகைய வசனத்தின் ஊடாக பிரச்சினைகளை ஒரு குழு ஊடாக தீர்த்துவைக்க வேண்டும் என்ற அவசியத்தை வலியுறுத்துகின்றது.

மேலும் நபித்துவ கால முன்மாதிரி செயற்பாடுகளில் ஒன்றாக குடுபத்திலுள்ளான பிரச்சினைகள் நபி (ஸல்) அவர்களிடம் முன்வைக்கப்பட்டு தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது சமூகத் தலைமை இவ்விவகாரங்களில் ஈடுபடுவதின் தேவையை உணர்த்துகின்றது.

குடும்பத்தில் ஏற்படுகின்ற பிரச்சினைகளை தனிமனிதர்கள் தனித்து நின்று தீர்த்துவைப்பது சிரமமான காரியமாகும். எனவே சமூகத்தின் அங்கமாகக் காணப்படுகின்ற நிறுவனங்கள் சமூகப், பொருளாதார, உள, உணர்வு, ஒழுக்கவியல் சார்ந்த துறைகளை கட்டியெழுப்ப முனைவதாலும், அத்துறையுடன் தொடர்புபட்ட விடயங்களிலேயே கணவனும் மனைவியும் சிக்கிக் கொள்வதாலும் அப்பிணக்குகளை அத்துறைசார்ந்த நிறுவனங்கள் தீர்த்துவைப்பதே சாலச் சிறந்ததாகும்.

இஸ்லாமிய வரலாற்றின் நெடுகிலும் குடும்பப் பிணக்குகளை கையாள்வதற்கான நடைமுறை பரிணாம வளர்ச்சி அடைந்து வந்திருப்பதை காணமுடியும். குறிப்பாக மஸ்ஜிதுகள், அவற்றின் இமாம்கள் இப்பணியை மேற்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக மஸ்ஜிதுன் நபவியின் செயற்பாட்டை கூற முடியும். "நபி (ஸல்) அவர்கள் காலத்தில் ஸாபித் பின் கைஸ் (ரழி) என்பவரின் மனைவி நபி (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதரே எனது கணவரின் நடத்தையையோ, நற்குணத்தையோ நான் குறை கூறமாட்டேன். ஆனாலும் இஸ்லாத்தில் இருந்து கொண்டே இறைவனுக்கு மாறு செய்வதை நான் வெறுக்கிறேன். என்றார். (அதாவது கணவர் நல்லவராக இருந்தாலும் அவருடன் இணைந்து வாழத் தனக்கு விருப்பமில்லை என்றார்) உடனே நபி (ஸல்) அவர்கள் அப்படியானால் அவர் உனக்கு மஹராக வழங்கிய அவரது தோட்டத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுகிறாயா? என்று கேட்டார்கள். அதற்கு அப்பெண்மணி சரி என்றாள். உடனே நபி (ஸல்) அவர்கள் அவரது கணவனிடம் தோட்டத்தைப் பெற்றுக் கொண்டு அவளை ஒரேயடியாக விடுவித்துவிடு என்றார்கள்" (புஹாரி 5273, 5275, 5277)


மேற்கு நாடுகளில் முஸ்லிம்களிடையே இத்துறைசார் பங்களிப்பை மஸ்ஜிதின் இமாம் ஆற்றுவது அவதானிக்கத்தக்கது. பொதுவாக உள்ளகக் குடும்பப் பிரச்சினைகளை தீர்த்து வைக்கின்ற முயற்சி ஒரு நிபுணத்துவ செயற்பாடாக அமைவது உசிதமாகும். பல நாடுகளில் இதற்கான பிரத்தியோகமான நிறுவனங்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இத்துறைசார் கற்கைகளும், பயிற்சிகளும் ஏற்படுத்தப்பட்டிருப்பது இதன் முக்கியத்துவத்தைக் காண்பிக்கவல்லது.

முஸ்லிம் தனியார் சட்டம் நிறுவிய காழி நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் பன்முகத்தன்மை கொண்டதாக இருந்த போதிலும் முஸ்லிம் குடும்பம் ஒன்றில் ஏற்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்துவைத்தலே அந்நிறுவனத்தின் பிரதான நோக்கமாகும். இதனையே அச்சட்டமூலத்தின் 1936 ஆம் ஆண்டின் இல 8256ஆம் சரத்து காண்பிக்கின்றது. அதிகமான குடும்பப் பிரச்சினைகள் காழி நீதிமன்றங்களுக்கே சமர்ப்பிக்கப்படுகின்றது. இவ்வேளையில் பிரச்சினைகளின் தன்மையை கருத்தில் கொண்டு நீதிமன்றால் தீர்க்கக்கூடிய பிரச்சினைகளை காழி நீதிமன்றினூடாகவும், தீர்க்கமுடியாத பிரச்சினைகளை அம் முரண்பாடு சார் துறையுடன் தொடர்புபட்ட நிறுவனங்களின் உதவியுடன் தீர்த்துவைக்க வேண்டியது இதன் கடமைப்பாடாக உள்ளது.

இவ்வாறே குடும்ப உளவள ஆலோசனை நிலையம், குடும்ப நலன்சார் பிரத்தியோக அமைப்புக்கள் போன்றன தங்களுடைய பணிகளில் ஒன்றாக குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்தல் என்ற அம்சத்தை உள்வாங்குகின்ற பொழுது பிரச்சினைகளின் அதிகரிப்பின் அளவை குறைக்க முடியும்.

இலங்கையின் காத்தான்குடிப் பிரதேசம் சன அடர்த்தியைக் கொண்ட முஸ்லிம் பிரதேசமாகும். இங்கு சுமார் 13,757 முஸ்லிம் குடும்பங்கள் வசித்து வருகிறார்கள். இப்பிரதேசத்தில் உள்ளகக் குடும்பப் பிரச்சினைகள் அதிகரித்து வருவதாக காழி நீதிமன்ற அறிக்கை காண்பிக்கின்றது. குறிப்பாக கணவன் மனைவி தகாத உறவு, கணவனின் போதைப் பொருள் பாவனை, நவீன தொடர்பு சாதனங்களின் அதிகரித்த பாவனை, கணவன் மனைவியின் தேவையற்ற கடன் போன்ற பல பிரச்சினைகளை மையப்படுத்தியதாக வழக்குகள் பதியப்படுகின்றது. கடந்த 2010 – 2014 வரையான ஐந்து வருடங்களில் பதியப்பட்ட குடும்பப் பிரச்சினை தொடர்பான வழக்குகளில் விவாகரத்து, பஸ்க்கான விண்ணப்பங்கள் அதிகரித்துச் செல்கின்றது என்பதை ஆய்வு காண்பிக்கின்றது. இதனை பின்வரும் வரைபடம்: 1 எடுத்துக் காண்பிக்கின்றது.

வரைபடம்: 1 குடும்பப் பிரச்சினை தொடர்பான வழக்குகள்




இஸ்லாமிய பாரம்பரியமிக்க இப்பிரதேசத்தில் இஸ்லாத்தினதும், முஸ்லிம்களினதும் மேன்பாட்டிக்காக செயற்படும் இஸ்லாமிய நிறுவனங்களாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும். ஜம்யதுல் உலமா சபை, இஸ்லாமிய வழிகாட்டல் நிலையம், இஸ்லாமிய இளைஞர் கழகம், இஸ்லாமிய

கலைக் கலாசார மன்றம், முஅத்தின்கள் சங்கம், அகில இலங்கை கதீப்மார் சங்கம், முஸ்லிம் வர்த்தகர் சங்கம், இஸ்லாமிய தௌகீத் நிலையம், கல்வி அபிவிருத்திச் சங்கம், நவ முஸ்லிம் நலன் அமைப்பு, இஸ்லாமிய தொண்டர் அமைப்பு, இஸ்லாமிய பொது நலன் ஐக்கிய முன்னணி, த.்வா நிலையம், முஸ்லிம் லீக் வாலிபர் முன்னணி, ஐக்கிய முஸ்லிம் பொது நல அமைப்பு, பட்டதாரிகள் சங்கம், சமூக மேன்பாட்டுக் கழகம், ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான மகளிர் ஒன்றியம், பெண்களுக்கு வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு, திருமண நல்லிணக்க சபை, மஸ்ஜித், ஸகாத் நிறுவனம், காழி நீதிமன்றம், மாதர் சங்கம், மத்ரஸாக்கள், பைத்துல் மால் நிதி நிறுவனம், காப்புறுதி நிதியம், ஸ்ரீலங்கா ஹிரா பவுண்டேசன், நிதாஉல் கைர் பவுண்டேசன் போன்ற இஸ்லாமிய நிறுவனங்கள் குறிப்பிடலாம்.

**ஆய்வின் பிரச்சினை**

காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களில் இடம்பெறும் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் இஸ்லாமிய நிறுவனங்களின் பங்களிப்பை இவ்வாய்வு பரிசீலிக்கிறது.

**ஆய்வின் நோக்கம்**

காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம் குடும்பங்களின் கணவன், மனைவிக்கிடையில் இடம்பெறும் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் இஸ்லாமிய நிறுவனங்களின் பங்களிப்பை மதிப்பிடுதல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வு பண்பு ரீதியான முறையைத் தழுவியமைந்ததுடன் முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகளை மையப்படுத்தியதுமாகும். காத்தான்குடிப் பிரதேசத்தில் தொழிற்படுகின்ற 13 இஸ்லாமிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், முக்கியஸ்தர்கள் ஆகியோரிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. நேர்காணலில் குறித்த அமைப்புக்கள் குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதற்கான முனைவுகள் பற்றிய வினாக்களையும் உள்ளடக்கியுள்ளது. நேர்காணலில் பெறப்பட்ட தரவுகள் Coding முறையிலும் மேலும் இவ்விடயம் தொடர்பாக இஸ்லாமிய நிறுவனங்களின் ஆவணங்கள் மீளாய்வின் மூலமும் பகுப்பாய்வு செய்யப்பட்டன. ஆய்வுக்கான கோட்பாட்டு அமைப்புத் திட்டத்தை நிறுவுவதற்காக வேண்டி இரண்டாம் நிலைத்தரவுகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**கலந்துரையாடல், பிரதான கண்டறிதல்கள்.**

முஸ்லிம் குடும்பங்களின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார, சமய மேன்பாட்டைக் கருத்தில் கொண்டு மேற்குறிப்பிடப்பட்ட பல இஸ்லாமிய நிறுவனங்கள் காணப்பட்ட போதிலும் குடும்பப் பிரச்சினைகளைக் தீர்த்துவைப்பதை நோக்கமாகக் கொண்ட இஸ்லாமிய நிறுவனங்களும் காணப்படுகின்றன. காழி நீதிமன்றம், மஸ்ஜித்கள், ஸகாத் நிறுவனம், திருமண நல்லிணக்க சபை, ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம், பெண்களுக்கு வலுவூட்டலுக்கும் அபிவிருத்திக்குமான அமைப்பு போன்றவைகள் மேற்படி நோக்கத்தை அடைய களம் இறங்கி பணி புரிகின்றன.

ஆய்வுப் பிரதேசத்தில் இயங்கி வருகின்ற இஸ்லாமிய நிறுவனங்களில் முஸ்லிம் குடும்பங்களின் உள்ளகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதை முதல் பெரும் நோக்கங்களைக் கொண்டதாக காழி நீதிமன்றம், திருமண நல்லிணக்க சபை என்பன காணப்படுகின்றது. அதேவேளை கூட்டு ஸகாத் நிறுவனம், மஸ்ஜிதுகள், இஸ்லாமிய மகளிர் மேன்பாட்டு அமைப்பு ஆகியன தமது நோக்கங்களில் ஒன்றாக இதனைக் கொண்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள் இவ்விடயத்தை பிரத்தியோகமான ஒன்றாக கருதவில்லை. இருந்த போதிலும் இவ்விடயத்தில் ஈடுபாடு கொண்டுள்ள நிறுவனங்களுடன் இணைந்து செயலாற்றும் நடைமுறையைக் கொண்டுள்ளது.

இப்பிராந்தியத்தின் குடும்பப் பிரச்சினைகளை நேரடியாகப் பெற்றுக் கொள்கின்ற நிறுவனமாக காழி நீதிமன்றம் உள்ளது. இவ்வாறே திருமண நல்லிணக்க சபையும் நேரடியாகவும், காழி நீதிமன்றத்தின் மூலமும் சமர்ப்பிக்கப்படுகின்றது. பிரச்சினைகள் மஸ்ஜிதுகளுக்கு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. மேற்குறிப்பிடப்பட்ட பிரச்சினைகளின் தன்மையினைப் பொறுத்து இப்பிராந்தியத்தின் ஏனைய நிறுவனங்களான கூட்டு ஸகாத் அமைப்பு, இஸ்லாமிய மகளிர் அமைப்பு என்பனவற்றிக்கு கையளித்துள்ளது. சமூகத்தில் நிலவும் குடும்பப் பிரச்சினைகளை களமிறங்கி கண்டறியும் முனைவுகளில் மேற்சொன்ன நிறுவனங்கள் ஈடுபாட்டைக் காண்பிக்கவில்லை. எனினும் இஸ்லாமிய மகளிர் அமைப்புக்கள் குடும்பப் பிரச்சினை தொடர்பான நேரடியான கண்டறிதல்களில் ஈடுபடுவதும் அறிதாகும். (நேர்காணல்: காழி நீதிமன்றம், திருமண நல்லிணக்க சபை)


உள்ளகக் குடும்பப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், அவற்றைப் பகுப்பாய்வதிலும், தீர்வுக்கான முனைவுகளிலும் நிறுவனங்களுக்கிடையே வேறுபாடு காணப்படுகின்றன. குடும்பப் பிரச்சினைகளை முறைப்பாடுகளாக பெறும் காழி நீதிமன்றம் ஒரு சில இஸ்லாமிய நிறுவன உறுப்பினர்களின் பங்குபற்றுதலுடன் காழியின் தனிப்பட்ட முயற்சியின் ஊடாகவே தீர்க்க முனைகிறது. இதேவேளை திருமண நல்லிணக்க சபை ஒரு நிபுணத்துவம் சார் அமைப்பில் பிரச்சினைகளை கையாள்வதை அவதானிக்க முடிகிறது. கற்றறிந்தவர்கள், சட்டத்தரணிகள், முன்னால் காழி நீதிபதிகள், மூத்த உலமாக்கள் போன்ற அனுபவமுள்ள ஆளணியைக் கொண்டதான இச்சபை விசாரனைக்கு என தனியான குழுவைக் கொண்டுள்ளது. இக்குழு கணவன் மனைவியிடையே விசாரனைகளை மேற்கொண்டு தனது அறிக்கையை சமர்ப்பிக்கிறது. பிரச்சினைகளின் தன்மைக்கு ஏற்ப தீர்வுக்கான அம்சங்கள் வேறுபட்டுக் காணப்படுகின்றது. (நேர்காணல்: காழி நீதிமன்றம், திருமண நல்லிணக்க சபை)

கூட்டு ஸகாத் அமைப்பு, இஸ்லாமிய மகளிர் அமைப்புக்கள், மஸ்ஜிதுகள் என்பன தேவையைப் பொருத்து விசாரனைக் குழுவை அமைத்து இப்பிரச்சினைகளை விசாரனைக்குட்படுத்துகிறது. காழி நீதிமன்றம் தவிர்ந்த ஏனைய நான்கு நிறுவனங்களும் விசாரனைக் குழு மூலம் இதனை மேற்கொள்வது சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஒப்பீட்டு ரீதியில் அதிகளவான குடும்பப் பிரச்சினைகளைப் பெறும் காழி நீதிமன்றம் அவற்றைப் பதிவு செய்து அப்பிரச்சினைகளின் தன்மைக்கு ஏற்ப தீர்வினை அமைத்துக் கொள்வதற்கு ஏனைய நிறுவனங்களின் அனுசரனையை பெரிதும் நாடுகின்றது. ஆயினும் காழி நீதிமன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகளில் சொற்ப வீதமே சமரச தீர்வைப் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த 2010 - 2014ஆம் ஆண்டு வரையில் மொத்தமாக 725 குடும்பப் பிணக்குடன் தொடர்பான விண்ணப்பங்கள் சமர்பிக்கப்பட்டு அதில் 185 வழக்குகள் மாத்திரமே சமரசப்படுத்தப்பட்டுள்ளது. இது மணவிலக்குக்கான விண்ணப்பங்களின் வீதத்திலும் சமரசப்படுத்திய

விண்ணப்பங்களின் வீதத்திலும் பாரிய இடைவெளியைக் காண்பிக்கின்றது. இதனை பின்வரும் வரைபடம்: 2 மூலம் அறியலாம்.

வரைபடம்: 2 விவாகரத்து, பஸ்க்கான விண்ணப்பம், சமரசம்




இவ்வாறே மஸ்ஜிதுகள் சிறு பிணக்குகளைத் தீர்த்து வைப்பது முடியுமாக இருந்த போதிலும் அப்பிரச்சினைகளின் தன்மையைப் பொறுத்து ஏனைய நிறுவனங்களை நாடுவதே அதிகம். திருமண நல்லிணக்க சபை பிரச்சினைக்கான தீர்வை அடைவதில் ஒப்பீட்டு ரீதியில் முன்னிலை பெறுகின்றது. விசாரணைக் குழுவில் ஆண்களே அங்கத்துவம் பெற்றுள்ளதால் பெண்களின் விசாரணைக்காக ஏனைய அமைப்புக்களின் ஒத்துழைப்பை நாடுகின்றது.


இஸ்லாமிய பெண்கள் அமைப்புக்கள் நன்கு ஒழுங்கமைந்த செயற்பாட்டின் மூலம் பிரச்சினைக்கான தீர்வை ஏற்படுத்த செயல்படுகின்றன. பிணக்குகளில் சம்பந்தப்பட்டவர்களை அழைத்து விசாரணை மேற்கொண்டு பிரச்சினையின் தன்மையைக் கண்டறிவதோடு உளவளத் துணையாளர்களையும் ஈடுபடுத்தியுள்ளது.

குடும்பப் பிரச்சினைகள் பெரும்பாலும் பொருளாதாரத்தை மையப்படுத்தி இருப்பதால் பொருளாதார உதவிகளை வழங்கி பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெறும் வாய்ப்பை இவ்வமைப்புக்கள் கொண்டுள்ளன. இந்தவகையில் இந்நிறுவனங்கள் சர்வதேச, தேசிய அரசசார்பற்ற அமைப்புக்களோடு இணைந்து செயலாற்றுகின்றது. 2004 ஆம் ஆண்டு சுனாமியின் பின்னரான காலப்பகுதியில் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயற்திட்டங்கள் இப்பிராந்தியத்தில் வெகுவாகக் கூடியமை நிறுவனங்களுக்கிடையிலான இணைந்து செயலாற்றும் வாய்ப்பை மேன்படுத்தியுள்ளது. இத்தகைய செயற்றிட்டங்களில் இத்தகைய குடும்பங்களையும் இணைத்துக் கொள்வதற்கான ஆவணவற்றை இம் மகளிர் அமைப்புக்கள் செய்துள்ளன. (நேர்காணல்: மகளிர் அமைப்புக்கள்)

இவ்வாறே கூட்டு ஸகாத் நிறுவனம் குடும்பப் பிரச்சினைகளுக்கான காரணி பொருளாதாரமாக அமையும் வேளை பொருளாதார உதவிகளை வழங்கி பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பங்காற்றி வருகின்றது. பொதுவாக பொருளாதாரத் தேவைகளை மையப்படுத்திய விவகாரங்களில் ஈடுபடும் கூட்டு ஸகாத் முஸ்லிம்களிடையான குடும்பப் பிணக்குக்கு பொருளாதாரமே காரணம் எனக் கருதி கூடிய கரிசனை கொண்டு செயற்படுவது இயல்பானது. கடந்த ஐந்து வருடங்களில் கூட்டு ஸகாத் நிறுவனம் தொழில், வீடு திருத்தம், கடன் உதவி, வாழ்வாதார உதவிகள், மலசலக்கூடம் திருத்தல் போன்ற உதவிகளை இத்தரப்பினருக்கு மேற்கொண்டதன் விளைவாக குடும்பப் பிரச்சினைகளுக்கான

பொருளாதாரக் காரணிகளை ஓரளவு கட்டுப்படுத்த முடிந்துள்ளது. இதனை பின்வரும் வரைபடம்: 3 காண்பிக்கின்றது.

வரைபடம்: 3 வாழ்வாதார உதவிகள், பயனாளிகளின் எண்ணிக்கை.




இன்னும் கூட்டு ஸகாத் அமைப்பு வீடு இன்றி தவிர்க்கும் தம்பதிகளுக்காக வீட்டுத் திட்டத்தையும் அமைத்து வருகின்றது. சம்மேளன கூட்டு ஸகாத் நிதியத்தினால் கொள்வனவு செய்யப்பட்ட சிகரம் காணியில் இலங்கை ஜமாத்தே இஸ்லாமின் கிளை அமைப்பான ஆய்வுக்கும் அபிவிருத்திக்குமான செரண்டிப் பவுண்டேசன் (SFRD) உடன் தொடர்பு கொண்டு வீடுகளை அமைத்து வருகின்றது. (நேர்காணல்: கூட்டு ஸகாத் அமைப்பு)

உள்ளகக் குடும்பப் பிரச்சினைகளைக் கையாள்வதிலும், தீர்ப்பதிலும் காத்தான்குடிப் பிரதேசத்தில் நிறுவனங்களுக்கிடையிலான இணைந்த செயற்பாடு காணப்படுகின்றது. பிரச்சினையின் தன்மை, அவற்றைத் தீர்த்துவைக்கும் ஆற்றல் என்பனவற்றிக்கு ஏற்ப ஒன்று மற்றொன்றுடைய ஒத்துழைப்பைப் பெறுகிறது. பெண்கள் தொடர்பான விவகாரங்களைக் கையாள்வதற்று இஸ்லாமிய மகளிர் அமைப்புக்களின் ஒத்துழைப்பை நாடுகின்றது. பொருளாதார ரீதியான தேவையை நிவர்த்தி செய்வதில் அவ்வளம் பெற்ற நிறுவனங்கள் ஒன்று மற்றொன்றுக்கு துணை செய்கின்றது. காத்தான்குடிப் பள்ளிவாயல்கள், மற்றும் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் கீழ் கூட்டு ஸகாத் அமைப்பு, திருமண நல்லிணக்க சபை, பள்ளிவாயல்கள் காணப்படுகின்றமை இதற்கான வாய்ப்பினை வளப்படுத்தியுள்ளது. மேலும் மகளிர் அமைப்புக்கள் அப்பிராந்தியத்தில் செயல்படும் பொதுவான அமைப்புகளுடைய உதவியைப் பெற்றுக் கொள்கின்றன. குறிப்பாக குடும்பங்களில் உள்ள பெண்களுக்கான தொழிற் பயிற்சியை வழங்குவதில் ஏனைய நிறுவனங்களின் உதவி பெறப்படுகின்றது.

குடும்பப் பிரச்சினைகளைக் கையாள்வதில் மேற்சொன்ன நிறுவனங்களிடையே அடைவு நிலையில் வேறுபாடு காணப்படுகின்றது. அவற்றுக்கான பிரதான காரணங்களாக ஆளனி, நிபுணத்துவம், நிர்வாகக் கட்டமைப்பு பௌதீக வளம். பொருளாதார பலம் என்பன அமைந்துள்ளன.

**முடிவுரை**

காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம்களின் குடும்ப பிரச்சினைகளைக் கையாள்வதில் சில இஸ்லாமிய நிறுவனங்களின் பங்குபற்றுதல் காணப்படும் அதேவேளை இந் நிறுவனங்களிடையே பிரச்சினைகளை கையாள்வதிலும், தீர்ப்பதிலும் வேறுபாடு நிலவுகிறது. நிறுவனங்களால் பொதுவான பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடியதாக இருக்கும் நிலையில் குறித்த சில நிறுவனங்கள் ஒழுங்கமைக்கப்பட்டு செயலாற்றும் திறன்களை கொண்டுள்ளன. பிரச்சினைகளைத் தீர்ப்பதில் நிறுவனங்களுக்கிடையில் இணைந்த செயல்பாடு வெற்றிவீதத்தை அதிகரித்துள்ளது. இவ்வாய்வின் கண்டறிதல்கள் நிறுவனங்களின் பங்களிப்புக்கான ஆவணமாக அமைவதோடு அது தொடர்பான ஈடுபாட்டில் ஆர்வம் கொண்டவர்களுக்கான மாதிரிகளாக அமைக்கின்றன. மேலும் இத்தகைய ஆய்வுகள் வேறு முஸ்லிம் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்படுவதை இவ்வாய்வு பரிந்துரைக்கின்றது.

**உசாத்துணைகள்**


புஹாரி, மு. இ., ஜாமிஉ அல்- ஸஹீஹ், பாகம் -68, பாடம்: 12, 13 தலைப்பு: மணவிலக்கு (தலாக்), ரஹ்மத் அறக்கட்டளை, சென்னை.

புஹாரி, எம்.எச்.எம்., அப்துல் ஜவாத், ஏ.எல்., மற்றும் சுபைர், எஸ்.எம்.எம்., (2004), "காத்தான்குடி வரலாறு ஓர் அறிமுகம்", காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.

பிரதேச செயலகம், (2015). வருடாந்த அறிக்கை – 2015. காத்தான்குடி: பிரதேச செயலக திட்டமிடல் பிரிவு.

காழி நீதிமன்றம், (2015). வருடாந்த அறிக்கை 2010 - 2014. காத்தான்குடி: காழி நீதிமன்றம்.

கூட்டு ஸகாத் அமைப்பு, (2015). வருடாந்த அறிக்கை 2010 - 2014. காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.

திருமண நல்லிணக்க சபை, (2015). வருடாந்த அறிக்கை 2015. காத்தான்குடி: பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம்.


**நேர்காணல்**


அனீஸா பிர்தௌஸ், எஸ். (2015). குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் மகளிர் அமைப்புக்களின் பங்களிப்பு, நேர்காணல்: 22.05.2015, காத்தான்குடி.

ஸல்மா ஹம்ஸா, எம். எஸ். (2015), குடும்பப் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதில் மகளிர் அமைப்புக்களின் பங்களிப்பு, நேர்காணல்: 22.05.2015, காத்தான்குடி.